செ.வெ.எண்:21 நாள்:10.10.2017

**கரூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் வேளாண் இயந்திரமயமாக்கும் திட்டத்திற்கான செய்தி வெளியீடு**

கரூர் மாவட்டத்தில் உள்ள விவசாயிகளுக்கு வேளாண்மைப் பொறியியல் துறை மூலம் வேளாண்மை இயந்திரமயமாக்கும் திட்டத்தின் கீழ் நடப்பு 2017-18 நிதியாண்டில் வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் மானிய விலையில் வழங்கப்பட உள்ளது.

தமிழக அரசின் 2017-18 ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையில் வேளாண் இயந்திரமயமாக்கலுக்காக ரூ.100 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது எனவும் அதில் ரூ.30 கோடி தனிப்பட்ட விவசாயிகள் மானிய விலையில் வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் வாங்கிடவும், 590 எண்கள் வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் வாடகைக்கு வழங்கும் மையங்கள் அமைத்திடவும் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டது. இத்திட்டம் வேளாண்மைப் பொறியியல் துறையால் செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டத்தில் 8 குதிரை திறன் முதல் 70 குதிரைத் திறன் வரை சக்தி கொண்ட டிராக்டர்கள், பவர் டில்லர், நெல் நடவு இயந்திரம், வைக்கோல் கட்டும் கருவி, சுழல் கலப்பை, விசைக் களையெடுப்பான், விதைக்கும் கருவி, வரப்பு அமைக்கும் கருவி, தட்டு வெட்டும் கருவி, டிராக்டரில் இயங்கும் தெளிப்பான் முதலான வேளாண் இயந்திரங்களும் கருவிகளும் வாங்கிக் கொள்ள விவசாயிகளுக்கு மானிய உதவி வழங்கப்படுகிறது.

## மானிய உதவி

இத்திட்டத்தில் சிறு, குறு, ஆதி திராவிட, பழங்குடியின மற்றும் பெண் விவசாயிகளுக்கு 50 சதவீதம் வரையும், இதர விவசாயிகளுக்கு 40 சதவீதம் வரையுமான தொகை அல்லது அரசால் நிர்ணயம் செய்யப்பட்ட அதிக பட்ச மானியத் தொகை இவற்றில் எது குறைவோ அத்தொகை மானியமாக வழங்கப்படுகிறது.

மானியத்திற்கு தகுதியாக்கப்பட்ட வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளின் விவரம், அரசால் அங்கீகரிக்கப்பட்ட பல்வேறு நிறுவனங்களின் இயந்திரங்கள் மற்றம் கருவிகளின் விலைப் பட்டியல்கள், மானிய விவரங்கள் ஆகியவை இம்மாவட்டத்தின் கீழ்க்கண்ட முகவரியில் உள்ள வேளாண்மைப் பொறியியல் துறையின் உதவி செயற் பொறியாளர் அலுவலகங்களில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது. மானிய உதவியுடன் கருவிகளை வாங்க விரும்பும் விவசாயிகள் வேளாண்மைப் பொறியியல் துறையில் உரிய நில உரிமை ஆவணங்கள், சிறு அல்லது குறு விவசாயி சான்று, ஆதார் போன்ற அடையாள ஆவணங்களுடன் விண்ணப்பித்து, மூதுரிமைப் பதிவேட்டில் பதிவு செய்யப்பட வேண்டும்.

இத்திட்டத்திற்கு கரூர் மாவட்டத்திற்கு நடப்பு ஆண்டில் ரூ. 11.45 இலட்சம் மானியத் தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## வேளாண் கருவிகள் வாடகைக்கு வழங்கும் மையங்கள்

மேலும், சிறு மற்றும் குறு விவசாயிகள் அதிக விலையுள்ள இயந்திரங்கள் மற்றம் கருவிகளை சொந்தமாக பெற்றுக் கொள்ள இயலாததை கருத்தில் கொண்டு அவற்றை குறைந்த வாடகையில் பெற்றிட ஏதுவாக வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் வாடகைக்கு வழங்கும் மையங்கள் அமைக்கவும் மானிய உதவி வழங்கப்படுகிறது.

இதன் படி வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் வாடகைக்கு வழங்கும் மையங்கள் அமைக்க விரும்பும் குழுக்களோ அல்லது தொழில் முனைவோரோ, ரூ. 25 இலட்சம் மதிப்புடைய வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளை வாங்கி வாடகை மையங்கள் அமைக்க முன் வந்தால் அவர்களுக்கு 40 சதவிதித மானிய அடிப்படையில் அதிக பட்சமாக ரூ.10 இலட்சம் வரை மானியமாக வழங்கப்படும்.

நடப்பு நிதி ஆண்டில் கரூர் மாவட்டத்திற்கு ரூ. 20.00 இலட்சம் மானியத் தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## கிராம அளவிலான வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் வாடகைக்கு வழங்கும் மையம்

பண்ணை இயந்திரங்கள் மற்றும் கருவிகள் உபயோகம் குறைவாக உள்ள கிராமங்களில், கிராம அளவிலான குழுக்கள் ரூ. 10 இலட்சத்திற்கு குறையாத மதிப்புடைய பண்ணை இயந்திரங்களை வாங்கி, வாடகை மையங்கள் நடத்தலாம். இதனை விவசாயக் குழுக்கள், உழவர் உற்பத்தியாளர் அமைப்புகள் போன்றவை மேற்கொள்ளலாம். நடப்பாண்டில் கரூர் மாவட்டத்தில் நீடித்த புஞ்சை நில சாகுபடிக்கான திட்டத்தின் கீழ் தேர்வு செய்யப்பட்ட கிராமங்களில் உள்ள குழுக்கள் இதனை பயன்படுத்திக் கொள்ளலாம்.

இத்திட்டத்திற்கு நடப்பு நிதி ஆண்டில் கரூர் மாவட்டத்திற்கு ரூ. 32.00 இலட்சம் மானியத் தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட திட்டங்களில் பயனடைய விரும்பும் விவசாயிகள், விவசாய குழுக்கள், தொழில் முனைவோர், மாவட்ட செயற் பொறியாளர், வேளாண்மைப் பொறியியல் துறை அல்லது சம்மந்தப்பட்ட உதவி செயற் பொறியாளர், வேளாண்மைப் பொறியியல் துறை அலுவலகத்திலிருந்து விண்ணப்பங்களை பெற்று பூர்த்தி செய்து கொடுக்க வேண்டும்.

விண்ணப்பத்துடன் பாஸ்போர்ட் அளவு 2 புகைப்படம், ஆதார் அட்டை நகல், சிட்டா அடங்கல் நகல், சிறு, குறு விவசாயிகளுக்கான சான்று, ஜாதிச் சான்று நகல், டிராக்டரில் இணைத்து இயக்கக் கூடிய கருவியாக இருந்தால் டிராக்டரின் பதிவுச் சான்று நகல், வங்கிக் கணக்குப் புத்தகத்தின் முதல் பக்க நகல் போன்றவற்றினை இணைத்து வழங்க வேண்டும். விண்ணப்பங்கள் மூதுரிமை பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டு, முன்னுரிமை அடிப்படையில் கருவிகள் வாங்க அனுமதி வழங்கப்பட்டு பின்னர் மானியம் வழங்கப்படும். விவசாயிகள் தாங்கள் விரும்பும் வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளுக்கான முழுத் தொகையையும் வங்கி கேட்பு வரைவோலை மூலமாக உரிய உற்பத்தி நிறுவனங்களுக்கு வழங்கிட வேண்டும்.

வேளாண் இயந்திரங்கள், கருவிகளை விவசாயிகள் பெற்ற பின்னர் அதனை வேளாண்மைப் பொறியியல் துறை அலுவலர்கள் பார்வையிட்டு உறுதி செய்த பின்னர் அதற்குரிய மானியத் தொகையை சம்பந்தப்பட்ட பயனாளி விவசாயிகளின் வங்கிக் கணக்கில் நேரடியாக செலுத்தப்படும்.

வேளாண் இயந்திரமயமாக்கும் திட்டத்தில் கரூர் மாவட்டத்திற்கு தனிப்பட்ட இயந்திரங்கள் வாங்கிக் கொள்ள நடப்பாண்டில் ரூ. 11.45 இலட்சங்களும், வாடகை மையங்கள் அமைக்க ரூ. 52.00 இலட்சங்களும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. எனவே, மானிய விலையில் கருவிகள் மற்றும் இயந்திரங்கள் பெற விரும்பும் விவசாயிகள் உடனடியாக வேளாண்மைப் பொறியியல் துறையில் பதிவு செய்து, பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**<u>கரும்பு சாகுபடிக்கேற்ற வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் வாடகைக்கு வழங்கும் மையங்கள்</u>**

கரும்பு சாகுபடியில் விவசாயிகளின் வருமானத்தைப் பெருக்கி, இயந்திரமயமாக்கலை ஊக்குவித்து, செலவினைச் சிக்கனப்படுத்த கரும்பு சாகுபடிக்கேற்ற வேளாண் இயந்திரங்கள், கருவிகள் வாடகைக்கு வழங்கும் மையங்கள் தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தில் நிறுவப்பட உள்ளது.

இத்திட்டம் 40 சதவிகித மானியத்தில், அதிக பட்சமாக ரூ. 60.00 இலட்சம் மானியத்துடன் கூட்டுறவு சர்க்கரை ஆலை / உழவர் உற்பத்தியாளர் அமைப்புகள் / தொழில் முனைவோர் மூலம் அமைக்கப்பட உள்ளது.

இதில் பயனடைய விரும்பும் பயனாளியின் விண்ணப்பம் வேளாண் இயந்திரமயமாக்கும் துணை இயக்க மாவட்ட அளவிலான செயலாக்கக் குழு கூட்டத்தில் ஒப்புதல் பெறப்பட்டு தலைமைப் பொறியாளர், வேளாண்மைப் பொறியியல் துறை, சென்னை அலுவலகத்தின் மூலம் மூதுரிமை அடிப்படையில் நிதி ஒதுக்கீடு வழங்கப்படும்.

பயனாளிகள் இம்மையத்திற்கான முழுத் தொகையையும் தேசிய மயமாக்கப்பட்ட வங்கியில் வங்கிக் கடனாக பெற்றிருக்க வேண்டும். கரும்பு சாகுபடிக்கேற்ற இயந்திரங்கள், கருவிகளை வேளாண்மைப் பொறியியல் துறை அலுவலர்கள் உறுதி செய்து மானியத் தொகையினை வங்கியில் ‘‘மானிய இருப்புத் தொகைக் கணக்கில்’’ செலுத்துவர். வாடகை மையம் நான்கு வருடங்களுக்கு திறம்பட செயல்படின், பின்னர் வங்கியால் மானியத் தொகை பயனாளிக்கு வழங்கப்படும்.

இத்திட்டத்தின் கீழ் பயன்பெற விருப்பமுள்ள உழவர் உற்பத்தியாளர் அமைப்புகள் / தொழில் முனைவோர் உடனடியாக வேளாண்மைப் பொறியியல் அலுவலகத்தில் விண்ணப்பிக்க கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**<u>சூரிய சக்தியால் இயங்கும் மோட்டார் பம்பு செட்டுகளை விவசாயிகளுக்கு வழங்கும் திட்டம்</u>**

இத்திட்டத்தின் கீழ் சூரிய சக்தியால் இயங்கும் 5 முதல் 10 குதிரைத் திறன் கொண்ட மோட்டார் பம்பு செட்டுகள் கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு ஆர்வமுடைய விவசாயிகளுக்கு 90 சதவீத மானியத்தில் வழங்கப்படும்.

1) தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் மூலம் இலவச மின் இணைப்பு பெற்றிருந்தால் அதனைத் துறக்க முன்வர வேண்டும்.
2) இலவச மின் இணைப்பிற்கான விண்ணப்பம் அளித்திருந்தால் அதனைத் திரும்ப பெறுவதற்கு சம்மதக் கடிதம் அளிக்க வேண்டும்.

மேற்கூறிய விதிமுறைகளின்படி வேளாண்மைப் பொறியியல் துறை மூலம் ஆர்வமுடைய பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டு, ஆழ்குழாய் கிணறுகள் மற்றும் திறந்தவெளி கிணறுகள் ஆகியவற்றில் சூரிய சக்தியால் இயங்கும் மோட்டார் பம்பு செட்டுகள் அமைத்திட தொழில் நுட்ப ரீதியான சாத்தியக் கூறுகளை ஆராய்ந்து இறுதி செய்யப்படும். சூரிய சக்தியால் இயங்கும் மோட்டார் பம்பு செட்டுகள் அமைத்திட வேளாண் பொறியியல் துறை மூலம் நிறுவனங்கள் மற்றும் விலை ஒப்புதல் செய்யப்படுகிறது. தேர்வு செய்யபட்ட பயனாளிகள் 10 சதவீத பங்களிப்பு தொகை செலுத்தும் பட்சத்தில் விவசாயிகளின் விருப்பத்திற்கேற்றவாறு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் மூலம் 90 சதவீத அரசு மானியத்தில் சூரிய சக்தி பம்பு செட்டுகள் அமைத்து தரப்படும்.

விவசாயிகள் அணுக வேண்டிய முகவரி மற்றும் தொலைபேசி எண்:

செயற்பொறியாளர்,
வேளாண்மைப் பொறியியல் துறை,
107, நவலடியான் காம்ப்ளெக்ஸ்,
அண்ணாநகர், மில்கேட்,
தாந்தோணிமலை அஞ்சல்,
கரூர் - 639 005.
தொலைபேசி எண்: 04324 255850

உதவி செயற்பொறியாளர்,
வேளாண்மைப் பொறியியல் துறை,
25 A/2 பழனியப்பா கார்டன்,
கருப்பக்கவுண்டன்புதூர் கிழக்கு,
தெரசா பள்ளி அருகில்,
பசுபதிபாளையம் அஞ்சல்,
கரூர் - 639 004.

உதவி செயற்பொறியாளர்,
வேளாண்மைப் பொறியியல் துறை,
20A பரிசல் துறை ரோடு,
பெரியபாலம்,
குளித்தலை – 639 104
தொலைபேசி எண்: 04323 222904.

**வெளியீடு:**

**செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,**
**கரூர்.**